# தேசிய கல்விக் கொள்கை: செப். 6, 7– இல் கருத்தரங்கு

**பெங்களூரு, செப். 2:** தேசிய கல்விக் கொள்கை 2020–இன் கீழ் பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து செப். 6, 7–ஆம் தேதிகளில் பெங்களூரில் கருத்தரங்கு நடைபெறுகிறது.

பெங்களூரு மாரத்தள்ளியில் உள்ள சிஎம்ஆர் தொழில்நுட்ப மையத்தில் செப். 6, 7–ஆம் தேதிகளில் சிஎம்ஆர் கல்விக் குழுமம், வித்யாபாரதி இணைந்து தேசியக் கல்விக் கொள்கை 2020–இன் கீழ் பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்த கருத்தரங்கை நடத்துகின்றன.

செப். 6–ஆம் தேதி காலை 10 மணியளவில் கருத்தரங்கை மாநில கல்வித் துறை அமைச்சர் பி.சி.நாகேஷ் தொடக்கிவைக்கிறார். இதில் சிறப்பு பேச்சாளராக தேசிய கல்விக் கொள்கை வரைவுக் குழு உறுப்பினர் என்.கே.ஸ்ரீதர் கலந்து கொள்கிறார்.